NILET

தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்

NILET 2007ஆம் ஆண்டு 26 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டது.
ஊழியர் குழாத்தினர் நிர்வாகச் செயற்பாடுகளை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு பணிப்பாளர் நாயகத்திற்கு உதவுகின்றனர்.

NILET நிறுவனம்

இலக்கம் 321/1, ஹைலெவல் வீதி, மாக்கும்புர, பன்னிபிட்டிய என்னும் இடத்தில் இயங்கி வருகின்றது.

NILET நிறுவனத்தின் பிரதான இலக்கு மொழிக் கல்வி மற்றும் பயிற்யினை மேம்படுத்துவதாக அமைவதோடு இந்நிறுவனம் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான பிரத்தியேக அமைப்புகளையும் கொண்டுள்ளது.

அரச ஊழியர்கள், மொழிப் பயிற்றுவிப்பாளர்கள், உரைபெயர்ப்பாளர்கள், மொழிபெயர்ப்பாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு மொழிப் பயிற்சினை வழங்கும் வகையில் NILET நிறுவனம் விசேட பாடநெறிகளை வடிவமைத்து வழங்கிக்கொண்டிருக்கின்றது

உள்ளடக்கம்

பக்கம் - 57 தலைவரின் செய்தி

பக்கம் - 58 முகாமைத்துவச் சபை, கல்விச் சபை

பக்கம் - 59 எமது நோக்கம்

பக்கம் - 61 NILET பற்றி

பக்கம் - 65 மொழியியல் அடிவானத்தின் திறப்பு

பக்கம் - 66 எமது மாணவர்கள் என்ன சொல்கின்றார்கள்?

பக்கம் - 67 பாடத்திட்ட விருத்தி

பக்கம் - 72 PRH முறையியல்

பக்கம் - 73 NILET இற்கு NLEAP இன் பிரதிபலன்கள்

பக்கம் - 74 மொழி ஒரு பாலமாக

பக்கம் - 75 பாடநெறிகளும் செயற்திட்டங்களும்

பின்னால் உள்ள வெற்றி NILET

இன்றைய இயந்திரமயமான உலகிலே அறிவு மற்றும் கண்டுபிடிப்புக்களை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்வதற்கு பயன்படுத்தப்படும் மிகவும் ஆளுகை மிக்க ஓர் உத்தியாக தொடர்பாடல் காணப்படுகின்றது.

ஒன்றுக்கு மேற்பட்ட பல மொழிகளை அறிந்துகொள்வதன் மூலமே வெற்றகரமான தொடர்பாடல் நிகழ்கின்றது. இன்றைய உலகில் முக்கிய விருப்புகளை அடைந்துகொள்வதற்கு இது மிகவும் பங்களிக்கின்றது.

பல் மொழி ஆற்றல் கொண்டவர்களுக்கு இன்று உலகில் பல அமைப்புக்களிலும் ஒரு பெரிய வரவேற்பு காணப்படுவது மறுக்க முடியாத உண்மையாகும். எவ்வாறாயினும் அனைத்து மொழிகளுக்கும் சமனான மதிக்கப்படுவதில்லை. சில மொழிகள் உங்களை முன்னோக்கிக் கொண்டு செல்லும்.

அரச அங்கீகாரத்தோடு கல்வி வசதிகளை பெற்றுக் கொடுப்பதன் மூலம் பல மொழிகளையும் கற்றுக்கொள்ள விருப்பத்தோடு இருப்பவர்களுக்கு அம்மொழிகளை கற்கக்கூடிய வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பது எமது இலக்காகக் காணப்படுகின்றது.

புதிய தொழிநுட்பங்களை பிரயோகித்தல், சிறப்பான செயற்பாடுகள், பொறுப்புடைமை, பங்குபற்றுநர்களின் திருப்தியின் பொருட்டு அர்ப்பணித்தல் ஆகியவற்றின் அடிப்படையில் தான் எமது முழு வெற்றியும் தங்கியுள்ளது.

பங்குபற்றுநர்களின் தேவைகளை நிறைவுசெய்வதற்கு நாம் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் சிறப்பான, தரம்வாய்ந்த கற்பித்தல் முறைகளை பயன்படுத்துவதோடு, தரம்வாய்ந்த வளவாளர்களையும் திறன்மிக்க ஊழியர்களையும் ஈடுபடுத்துகின்றோம்.

எந்த ஒரு நிறுவனத்தினதும் வெற்றிக்கு சிறப்பான நிதிப் பதிவுகளே பிரதானமானது என்பதை நாம் அனைவரும் ஏற்றுக்கொள்கிறோம். இதனடிப்படையில் நாம் எப்போதும் சிறப்பான நிதி நிலைமைகளைப் பேணுவதன் மூலம் சிறப்பான ஒரு நிதி திட்டமிடலுக்கான அடிப்படையினை வழங்கிக்கொண்டிருக்கின்றோம்.

எமது நிறுவனம் 162 மில்லியன் ரூபா நிதியினை வருமானமாக ஈட்டியுள்ளதையிட்டு நாம் பெருமையடைவதோடு, இதன் விளைவாக 2023 ஆம் ஆண்டின் இறுதியில் சுயமாக வருமானம் ஈட்டும் ஒரு நிறுவனமாக எமது நிறுவனத்தை இட்டுச்செல்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கு நாம் திட்டமிடுகின்றோம்.

பிரத்தியேக வரவு செலவு உத்திகளைப் பயன்படுத்துவன் மூலமே எந்த ஒருவருக்கும் அவருடைய ஒழுங்கமைப்பிற்கு எதிர்காலத்தில் எஞ்சியிருக்கின்ற உண்மையான உள்நோக்கினை அடைவதற்கான நிதி இலக்குகளை அடைவதற்கு வழிசமைப்பதாக அமையும். எமது முக்கியமான வெற்றிக் கதைக்குப் பின்னால் எம்மோடு இருக்கின்ற அனைவருக்கும் எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

திரு. ஜயம்பதி பண்டார ஹீன்கெந்த
தலைவர்

முகாமைத்துவச் சபை

திரு. ஜயம்பதி பண்டார ஹீன்கெந்த
தலைவர்

திரு. அநுராத விஜேகோன்
மேலதிக செயலாளர், தேசிய மொழிகள் மற்றும் அரச சேவை மறுசீரமைப்பு
பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.

திருமதி. கே.டீ.ஐ.எஸ்.கே. சிறிவர்த்தன
பிரதிப் பணிப்பாளர், திறைசேறி செயற்பாட்டுத் திணைக்களம்
நிதி அமைச்சு

திருமதி. நிமாலி அனுஷா ஜயக்கொடி
பணிப்பாளர், தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் திணைக்களம்
கல்வி அமைச்சு

திரு. தினுக் ஹெட்டியாரச்சி
பட்டய கணக்காளர்

கலாநிதி. டப்.கே. கொலம்பகே
தலைவர் - வெல்போர்ட் குரூப் ஒப் கம்பனி

திரு. விதூசன் வின்சேந்திரராஜன்

திரு. எம்.ஜீ.எஸ்.எச்.எம். நௌசாத்

கலாநிதி பிரசாத் ஆர் ஹேரத்
பணிப்பாளர் நாயகம் / சபையின் செயலாளர்

கல்விச் சபை

திரு. ஜயம்பதி பண்டார ஹீன்கெந்த
தலைவர்

பேராசிரியர் சந்தகோமி கோப்பரஹேவா
தலைவர், சிங்கள மொழிகள் துறை,
கொழும்பு பல்கலைக்கழகம்

கலாநிதி. குசும்லதா லங்காமுல்ல
துறைத்தலைவர் - சிங்களம் மற்றும் வெகுசனத் தொடர்பாடல்
சமூக விஞ்ஞானம் மற்றும் மானுடவியல் பீடம்
ஸ்ரீ ஜயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்

கலாநிதி. கே.ஓ.டீ.எஸ். கருணாநாயக்க
துறைத்தலைவர் - ஆங்கில மொழிகள் துறை
கலைப் பீடம்
கொழும்பு பல்கலைக்கழகம்

கலாநிதி. எம்.ஏ.எஸ்.எப் சாதியா
துறைத்தலைவர் - மொழிகள் துறை
கலை மற்றும் கலாசாரப் பீடம்
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழம்

பேராசிரியர் எஸ். பிரசாந்தன்
துறைத் தலைவர் - தமிழக் கற்கைகள்
பேராதனைப் பல்கலைக்கழகம்

பீ.என்.ரத்நாயக்க
துறைத் தலைவர் - ஆங்கில மொழிகள் மற்றும் மொழியியல் துறை
மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
றுகுணு பல்கலைக்கழகம்

திரு. பீ. சேனாதீர
ஆணையாளர் நாயகம்
அரச கரும மொழிகள் திணைக்களம்

கலாநிதி பிரசாத் ஆர் ஹேரத்
பணிப்பாளர் நாயகம் / சபையின் செயலாளர

எமது இலக்குகள்

சிங்களம் தமிழ் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளையும் கற்பதற்கு ஆர்வம் உடையவர்களுக்கு அம்மொழிகளைக் கற்பிப்பதற்கான ஆசிரியர்களை உருவாக்குதல்

சட்ட எழுத்துருவிலான தேசிய மொழி பெயர்ப்பு சேவை மற்றும் தேசிய உரை பெயர்ப்பாளர் சேவைக்கு நியமனம் செய்யக்கூடிய சிங்களம் தமிழ் ஆங்கில மொழிபெயர்ப்பாளர்களையும் உரைபெயர்ப்பாளர்களையும் உருவாக்குதல்.

சிங்களம் தமிழ் ஆங்கில மொழிபெயர்ப்பாளர் உரைபெயர்ப்பாளர்களுக்குத் தரமான பயிற்சிகளை வழங்கக்கூடிய மொழிப் பயிற்றுவிப்பாளர் மற்றும் ஆசிரியர்களை உருவாக்குதல்.

பொதுமக்களுக்குச் சிறந்த சேவையை வழங்கும் பொருட்டு மும்மொழித் தேர்ச்சி உடையவர்களைப் பயிற்றுவித்தல்.

முன்னோக்கிய பார்வை



NILET தொடர்பானது....

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் மும்மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்தும் நோக்கில் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாடுகள் அமைச்சின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட ஒரு நியதிச் சட்ட நிறுவனமாக 2007 ஆம் அண்டு 26 ஆம் இலக்க தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் சட்ட ஏற்பாடுகளின் கீழ் தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனமானது ஸ்தாபிக்கப்பட்டது. தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் தலைமைக் காரியாலயமானது 321/1/A, ஹைலெவல் வீதி, மாக்கும்புர, பன்னிபிட்டிய என்னும் முகவரியில் அமைந்துள்ளது. பரந்துபட்டதாக, நாடு பூராகவும் மொழி கற்பித்தல் தொடர்பான பல்வேறு பாடநெறிகளைத் திட்டமிடுதல், ஒழுங்கு செய்தல், நடைமுறைப்படுத்துதல், அமைச்சு மற்றும் ஏனைய நிறுவனங்களுடன் இணைந்து வினைத் திறன்மிக்கதாக நிறுவனத்தின் நடவடிக்கைகளை மேலும் விரிவுபடுத்திக் கொள்ளும் நோக்கங்களுடன் கொழும்பு பிரதான காரியாலயம் ஸ்தாபிக்கப்பட்டது. எமது நிறுவனமானது பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல.18/2020 இற்கு அமைவாக வினைத் திறனான சேவையினை பொதுமக்களுக்கு வழங்கும் நோக்கத்துக்காக அரச ஊழியர்களின் இரண்டாம் மொழித் திறனை விருத்தி செய்வதற்கான இரண்டாம் மொழிப் பயிற்சியினை வழங்குவது தொடர்புடைய அனைத்து செயற்பாடுகளையும் மேற்கொள்கின்றது.

அகலவத்தை பயிற்சி நிலையம்

தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் பயிற்சி நிறுவனமானது கொழும்பிலிருந்து சுமார் 100 கி. மீ. தூரத்தில் களுத்துறை மாவட்டத்தில் கலேவத்தை, அகலவத்தை என்னும் பிரதேசத்தில் அமைந்துள்ளது. தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ அமைச்சுக்குச் சொந்தமான சுமார் 2.5 ஏக்கர் பரப்புடைய காணி அமைச்சரவையின் தீர்மானத்தின் அடிப்படையில் தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ளதுடன் இந் நிறுவனத்தினை ஸ்தாபிப்பதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் இவ் வளாகம் அமைந்துள்ள சூழலானது பலமான காரணியாக அமைந்துள்ளது. மொழிக் கற்றல் -கற்பித்தல் செயற்பாட்டினை அதிகளவிலான அழகியல், செயற்பாட்டு முறை மற்றும் புலைமைசார் ரீதியாக நடாத்தப்படுகின்ற அகலவத்தை பயிற்சி நிறுவனமானது வதிவிட வசதிகளைக் கொண்டமைந்த மனோரம்யமானதும் மனதைக் கவரக்கூடியதுமான சூழலிலும் அமைந்துள்ளது.

தம்புள்ள பிராந்திய பயிற்சி நிலையம்

கற்றுக் கொண்ட பாடங்கள் தொடர்பான ஆணைக்குழுவின் பரிந்துரைக்கு அமைவாக இரண்டாம் மொழி (சிங்களம் / தமிழ்), இணைப்பு மொழியாக ஆங்கிலம் மற்றும் ஏனைய வெளிநாட்டு மொழிகளைக் கற்பிப்பதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்குடன் 734/1, அநுராதபுர வீதி, தம்புள்ளை என்னும் முகவரியில் ஸ்தாபிக்கப்பட்ட இந்த பிராந்திய மத்திய நிலையம் 2020.07.24 ஆம் திகதி அரச சேவைகள், மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சின் கௌரவ அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன் அவர்களின் வழிகாட்டலின் கீழ் ஆரம்பித்து வைக்கப்பட்டது. தற்போது கமுதாவ, தம்புள்ள என்ற இடத்தின் நிர்வாகக் கட்டிடத் தொகுதியில் இந்த மத்திய நிலையமானது அமைந்துள்ளது. இந்த மத்திய நிலையத்தில் உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்) மேற்பார்வையின் கீழ் எழுவர் சேவையாற்றுகின்றனர். மாத்தளை, கண்டி, நுவரெலியா, குருநாகல், புத்தளம், அநுராதபுரம், பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களினைச் சேர்ந்த அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பொது மக்களுக்கான மொழிப் பயிற்சிப் பாடநெறிகளினை இந் நிறுவனமானது வினைத் திறனாகவும் ஒழுங்காகவும் வழங்கி வருகின்றது. மேற்படி மாவட்டங்களுக்கான மத்திய நிலையமாக செயற்படுகின்ற தம்புள்ளை நிலையமானது தனது சேவையினை ஏனைய மாவட்டங்களுக்கும் வழங்கி வருகின்றது.

முகாமைத்துவச் சபை

நிறுவனத்தின் நோக்கங்களினை அடைவதற்குத் தேவையான அனைத்துத் தேவையான தீர்மானங்களையும் மேற்கொள்கின்ற முகாமைத்துவச் சபையானது 2007 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்கம் கொண்ட தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனச் சட்டத்தின் 3(1) ஆவது ஏற்பாட்டிற்கு அமைய அமைச்சருக்கு ஒதுக்கப்பட்டுள்ள அதிகாரங்களிற்கு அமைவாக கௌரவ அமைச்சர் அவர்களினால் நியமிக்கப்படுகின்றது. 2022 ஆம் ஆண்டு மொத்தமாக நான்கு (04) முகாமைத்துவச் சபைக் கூட்டங்கள் நடைபெற்றன.

கல்விச் சபை

2007 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்கம் கொண்ட தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன சட்டத்தின் 07 ஆம் இலக்க ஏற்பாட்டின் கீழ் கௌரவ அமைச்சர் அவர்களினால் பல்வேறு பல்கலைக் கழகங்களிலிருந்துமான மொழிகள், மொழியியல் மற்றும் கல்வித் துறை சார்ந்த பின்வரும் கல்விச் சபை உறுப்பினர்கள் நிறுவனத்தின் கல்விசார் நடவடிக்கைகளிற்கு உதவியளிப்பதற்காகவும் மற்றும் ஏனைய செயற்பாடுகள் என்பவற்றை வினைத்திறன் கொண்டதாகச் செயற்படுத்துவதற்காக நியமிக்கப்பட்டுள்ளனர். அத்தகைய பல்கலைக்கழகங்களின் பேராசிரியர்கள் மற்றும் கலாநிதிகள் 1978 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட பல்கலைக்கழகங்களிலே கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுவதோடு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அனுமதியுடன் நியமிக்கப்படுவதுடன் அக் கல்விச் சபையானது நிறுவனத்தின் எதிர்கால இலக்குகளினைப் பிரதிநிதித்துவப்படும் வகையில் கொள்கை ரீதியான தீர்மானங்கள் மேற்கொள்ளும் போது நேரடியாக அதில் செயற்படும்.
சட்டத்தின் வழிகாட்டலிற்கு அமைவாக கல்விச் சபையானது கல்வி அலுவல்கள் தொடர்பாக நிறுவனத்திற்கு ஆலோசனை வழங்க வேண்டியதுடன் அக்கல்வி அலுவல்கள் தொடர்பான வழிமொழிவுகளை முகாமைத்துவச் சபைக்கு வழங்க வேண்டும்.

நிறுவனத்தின் பதவியணி

நிறுவனப் பதவியணியில் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் என்பதுடன் அவர் முகாமைத்துவச் சபையின் சட்ட ஏற்பாடுகளுக்கு உட்பட்டே செயற்பட முடியும். பணிப்பாளர் நாயகம் பின்வரும் கடமைகளைச் செய்கிறார். நிறுவனத்தின் நிர்வாகம் மற்றும் நிதி முகாமைத்துவம் தொடர்பான பொறுப்பு, நிறுவனத்தின் சகல பதவியணியினரையும் நியமித்தலும் நிர்வாகம் மற்றும் நிறுவன நடிவடிக்கைகளும், நிறுவனத்தினால் நடாத்தப்படும் சகல பயிற்சிச் செயற் திட்டங்களையும் ஒன்றிணைத்தலும் மேற்பார்வை செய்தலும்.

நிர்வாகம் மற்றும் வழங்கல் பிரிவு

நிறுவனத்தின் பதவியணியினருக்குரிய அனைத்து நிர்வாக மற்றும் நிறுவன நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுவது இப்பிரிவிலாகும். நிறுவனத்தின் எந்தவொரு பகுதியினதும் காரியாலய நடவடிக்கைகள் தங்குதடையின்றி இயங்கும் வகையில் தேவையான சகல உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கி, ஒவ்வொரு பிரிவுக்குமிடையே தொடர்புகளை மிகவும் சிறந்த முறையில் இப்பிரிவு பேணுகின்றது.
அத்துடன் இப்பிரிவு ஏனைய சகல பிரிவுகளுக்கும் தேவையான அலுவலர் குழாத்தினை குறித்த செயற்பாட்டுத் திட்டத்தினூடாக இணைத்துக் கொள்வதோடு அவர்களின் நிறுவன மற்றும் நிர்வாக நவவடிக்கைகளை நிறைவேற்றி, ஊழியர் நலன்புரி மற்றும் வசதிகளை வழங்கி, அவ்வப்பிரிவுகளின் செயற்பாடுகளானது ஆக்கத்திறன் மிக்க வகையில் வினைத்திறன் உடையதாக அமையும் பொருட்டு தேவையான அடிப்படை வசதிகளை வழங்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளது.

பயிற்சித் திட்டங்களுக்குத் தேவையான பயிற்சி உபகரணங்கள் மற்றும் நிறுவனத்தின் சகல பிரிவுகளுக்கும் தேவையான கணினி இயந்திரங்கள், அலுவலகத்திற்கு அன்றாடம் தேவைப்படுகின்ற காரியாலய உபகரணங்கள், காகிதாதிகள் என்பவற்றைக் கொள்வனவு செய்தல், போக்குவரத்து வசதிகளை வழங்குதல், பாதுகாப்புச் சேவை மற்றும் சுத்தப்படுத்தல் சேவையினை வழங்குதல் உட்பட சகல நடவடிக்கைகளும் இப்பிரிவினாலேயே மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வாறே நிறுவனத்தின் நூலகம் மற்றும் ஆவணப்படுத்தல் பகுதியும் இப்பிரிவினாலேயே நிர்வகிக்கப்படுகின்றது

பயிற்சிப் பிரிவு

இப் பயிற்சிப் பிரிவின் பிரதான பங்களிப்பாக அமைவது இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் மக்களுக்கான சிறந்த பொறிமுறையை உருவாக்கி இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தினை ஊக்கப்படுத்துவதன் மூலம் அரச கரும மொழிக் கொள்கைகளை முறையாக அமுல்படுத்துவதனை இலக்காகக் கொண்டு இந் நிறுவனத்தின் புறவய யதார்த்தத்தினை உருவாக்குவதாகும்.
அதற்கிணங்க பயிற்சிப் பிரிவின் மூலம் அரச ஊழியர்களுக்கு 3 தொகுதிகளின் கீழ் இரண்டாம் மொழிப் பயிற்சிப் பாடநெறிகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளதோடு அத்தகைய பாடநெறிகள் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு:

1. பதவி நிலை உத்தியோகத்தர்களின் பொருட்டு 200 மணித்தியால இரண்டாம் மொழி (சிங்களம் / தமிழ்) பாடநெறி நடைமுறைப்படுத்தல்.

2. இடை நிலை உத்தியோகத்தர்களின் பொருட்டு 150 மணித்தியால இரண்டாம் மொழி (சிங்களம் / தமிழ்) பாடநெறி நடைமுறைப்படுத்தல்.

3. ஆரம்ப நிலை உத்தியோகத்தர்களின் பொருட்டு 100 மணித்தியால இரண்டாம் மொழி (சிங்களம் / தமிழ்) பாடநெறி நடைமுறைப்படுத்தல்.

மேற்படி அனைத்து பாடநெறிகளையும் ஒழுங்குசெய்வதோடு அத்தகைய பாடநெறிகளை முறையாகக் கொண்டு நடாத்துவதற்குத் தேவையான முறைமைகளைப் பயன்படுத்தி பயிற்சிப் பாடநெறிகள் தொடர்பில் முறையான கண்காணிப்பு மற்றும் பின்தொடரல்களை நடாத்திச் செல்வதும் இப்பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படும் முக்கிய ஒரு செயற்பாடாகும். அவ்வாறே வளவாளர்களின் பட்டியலை இற்றைப்படுத்துவதோடு தேவையானபோது பாடநெறிகளுக்கு வளவாளர்களை அனுப்புவது மற்றும் அது தொடர்பில் தேவையான ஒழுங்குகளை மேற்கொள்வது ஆகியனவும் இப்பிரிவின் மூலம் இடம்பெறுகின்றன.
அவ்வாறே நிறுவனத்தின் நோக்கினை மிகவும் வினைத்திறன்மிக்கதாக கொண்டு செல்வதன் பொருட்டு பயிற்சிப் பிரிவிற்கு பின்வரும் செயற்பாடுகளும் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

1. அரச ஊழியர்களுக்கான பகுதி நேர பாடநெறிகளை நடாத்துதல்
2. ஆசிரியர் பயிற்சிப் பாடநெறிகளை நடாத்துதுதல்
3. கண்காணிப்பு மற்றும் பின்தொடரல் நிகழ்ச்சிகளை நடாத்துதல்
4. அனைத்து பகுதி நேர பாடநெறிகளின் பொருட்டும் மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல்

இதற்குப் புறம்பாக நிறுவனத்தின் மூலம் நடாத்தப்படுகின்ற வருமானம் ஈட்டும் பாடநெறிகளை கொண்டு நடாத்துவதும் பயிற்சிப் பிரிவின் மூலமாகும். இதன் பொருட்டு

1. இரண்டாம் மொழி சிங்களம் / தமிழ் டிப்ளோமா பாடநெறிகள்
2. இரண்டாம் மொழி கற்பித்தல் தொடர்பான சான்றிதழ்ப் பத்திரப் பாடநெறி, டிப்ளோமா பாடநெறி
3. மொழிபெயர்ப்பு டிப்ளோமா பாடநெறி
4. விசேட தொழிற்தகைமையுடையவர்களுக்கான இரண்டாம் மொழிப் பாடநெறிகள்
5. ஆங்கில மொழிப் பாடநெறி
6. வெளிநாட்டு மொழிகள் தொடர்பான பாடநெறிகள் (ஹிந்தி மொழி, கொரிய மொழி, பிரஞ்சு மொழி, யப்பான் மொழி, ரஷ்ய மொழி சான்றிதழ்ப் பத்திர பாடநெறி)
7. சைகை மொழி சான்றிதழ்ப் பத்திரப் பாடநெறி
8. கண்பார்வையற்றவர்களுக்கான விசேட புடையெத்து சான்றிதழ்ப் பத்திரப் பாடநெறி

இப்பாடநெறிகளுடன் தொடர்புடைய அனைத்து நடவடிக்கைகளும் பயயயிற்சிப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற அதேவேளை, காலத்தின் தேவைக்கேற்றவாறு பாடநெறிகளை இற்றைப்படுத்தி ஒழுங்குபடுத்தி வழங்குவது தொடர்பிலும் பயிற்சிப் பிரிவு தொடர்ந்தும் கண்காணித்துக்கொண்டிருக்கும். இலங்கை சமூகத்தில் பல்வேறு மொழிகளையும் பயன்படுத்தும் உரிமையை உறுதிப்படுத்தும் வகையில் பல்வேறு மொழிகளையும் பேசும் மக்களிடையே சமாதானம் மற்றும் சகவாழ்வு என்பன விருத்தியடையும் வகையில் இரண்டாம் மொழி கற்பித்தல் தொடர்பிலான சாதாரண முறைமையிலிருந்து விலகி, இதயபூர்வமான நிலையில் விநோதமான கலையுணர்வுடன் கூடிய கற்பித்தல் முறையினை, பிரயோக மொழி கற்பித்தலினூடாக நல்லிணக்கத்தின் மீதான மனநிலை விருத்தி அடையும் வகையில் சிறப்பு வாய்ந்த பாடநெறிகளை வழங்குவது தொடர்பில் பயிற்சிப் பிரிவு தொடர்ந்தும் தன்னுடைய கவனத்தை செலுத்தி வருகின்றது.

திட்டமிடல் பிரிவு

தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் சட்டவாக்கத்தின் கீழ் தெளிவுபடுத்தப்பட்டிருக்கும் பணிக்கூற்று மற்றும் நோக்கக் கூற்று என்பவற்றினை அடைவதற்குத் தேவையான திட்டங்களை வகுத்தல் இப்பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படும் பிரதான செயற்பாடாகும்.

பயிற்சித் தேவைப்பாடுகளை அடையாளம் காணுதல், அதற்கேற்றவாறான அமைப்பியல் திட்டம் மற்றும் மாதாந்த திட்டங்களை வகுத்து, கணக்குப் பிரிவோடு தொடர்புகொண்டு தேவையான நிதியினை மாதாந்தம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், மாதாந்த, காலாண்டு மற்றும் வருடாந்த முன்னேற்ற அறிக்கைகளைத் தயார்படுத்துதல், வருடாந்த செயற்திறன் அறிக்கைகளைத் தயார்படுத்தி குறித்த பிரிவிற்கு அனுப்பி வைத்தல் என்பன இப்பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளாகும். அவ்வாறே பல்வேறு செயற் திட்டங்களின் மூலம் மற்கொள்ளப்படும் வேலைத் திட்டங்கள் தொடர்பிலான திட்டங்களைத் தயார்படுத்துதல், அதற்குரிய முன்னேற் அறிக்கையினைத் தயார்படுத்துதல் என்பனவும் இப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன. திட்டமிடல் பிரிவின் தலைவராக உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்) செயற்படுவதோடு, அவரின் கீழ் ஒருங்கிணைப்பு உதவியாளர் ஒருவரும் சேவை புரிகின்றார்.

கணக்கியல் பிரிவு

நிறுவனத்தின் அனைத்து நிதி நிர்வாகம் மற்றும் கணக்கியல் செயற்பாடுகள் என்பன மேற்கொள்ளப்படுவது கணக்கியல் பிரிவின் மூலமாகும். நிறுவனத்தின் பிரதான கணக்கீட்டு அதிகாரி பணிப்பாளர் நாயகமாகக் காணப்படுகின்ற அதேவேளை, நிதி நடவடிக்கைகள், கணக்கியல் நடவடிக்கைகள் என்பவற்றுக்குப் பொறுப்பாக கணக்காளர் இருப்பார். நிறுவனத்தின் நிதி வருடமாக கலண்டர் வருடம் கொள்ளப்படுகின்றது.இதன் தலைவராக கணக்காளர் செயற்படுவதோடு, இவரின் கீழ் முகாமைத்துவ உதவியாளர்கள் மூவர் சேவையாற்றுகின்றனர்.

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

உள்ளக கணக்காய்வுச் செயற்பாடுகளை சுயாதீனமாகச் மேற்கொள்ளும் அதேவேளை, நிறுவனத்தின் நோக்கினை விருத்தி செய்தல் மற்றும் ஆலோசனைச் செயற்பாடுகளின் மூலம் நிறுவனத்தின் செயற்பாடுகளை விருத்தி செய்து பெறுமதிகளை சேர்த்துக் கொள்ளுதல் என்பன இப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன. மேற்படி நோக்கங்களை வெற்றிகொள்வதன் பொருட்டு முறையான மற்றும் ஒழுக்கமுள்ள பிரவேசத்தினை பயன்படுத்தி இடர் முகாமைத்துவம், நிர்வாகம் என்பவற்றை விருத்தி செய்தல் மற்றும் உற்பத்தித் திறனை ஊக்குவித்தல் ஆகிய செயற்பாடுகளும் இடம்பெறுகின்றன. தரவுகளின் பகுப்பாய்வு மற்றும் நிறுவனத்தின் செயற்பாடுகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு பரிந்துரைகளை முன்வைப்பதினூடாக ஒழுங்கமைப்பின் உள்ளக நிர்வாக செயற்பாடுகளுக்கு ஒத்திசைவாக இருத்தல் என்பன மேற்கொள்ளப்படுகின்றன.

2022 ஆம் ஆண்டில் முன்வைக்கப்பட்டிருக்கும் உள்ளகக் கணக்காய்வு அறிக்கை பின்வருமாறு:

1. தம்புள்ளை பிரதேச பயிற்சி நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்ட வருமானம் ஈட்டும் பாடநெறிகள் தொடர்பிலான உள்ளகக் கணக்காய்வு சோதனை

2. அகலவத்தைப் பயிற்சி நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்ட வருமானம் ஈட்டும் வதிவிடப் பாடநெறிகள் தொடர்பிலான உள்ளகக் கணக்காய்வு சோதனை

3. மூலதன ஒதுக்கீட்டின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பயிற்சிப் பாடநெறிகள் தொடர்பிலான உள்ளகக் கணக்காய்வு சோதனை

4. பாதுகாப்புச் சேவை மற்றும் சுத்திகரிப்புச் சேவை தொடர்பான உள்ளகக் கணக்காய்வு சோதனை

5. அரச வாணிபச் சுற்றறிக்கை 04/2022 இற்கு ஏற்ப செலவு முகாமை தொடர்பிலான உள்ளகக் கணக்காய்வு சோதனை

6. ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ள சேவைகள் தொடர்பிலான உள்ளகக் கணக்காய்வு சோதனை

7. வாகனங்களின் பயன்பாடு மற்றும் பராமரிப்பு தொடர்பான உள்ளகக் கணக்காய்வு சோதனை

8. தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட வருமானம் ஈட்டும் பாடநெறிகள் தொடர்பான உள்ளக கணக்காய்வு சோதனை.

திறவுகோல் மொழியியல் அடிவானத்திற்கு

NILET உலகலாவிய வினைத்திறனுக்கு காட்டும் வழி

சிறந்த தொடர்பாடலை பேணும் வகையில் நிலட் நிறுவனத்தின் இரண்டாம் மொழிப் பாடநெறிகள் அரச சேவை சூழ்நிலையில் அரச ஊழியர்களுக்கான இரண்டாம் மொழித் திறனை வழங்கும் நோக்குடன் வடிவமைக்கப்பட்டுள்ளன. இப்பாடநெறிகள் மொழித்தேர்ச்சியை மேம்படுத்தவும் மொழியியல்சார் இடைவெளிகளை நிரப்பும் மைற்கற்களாகவும் திகழ்கின்றன. வெவ்வேறுபட்ட மொழித்தேர்ச்சி மட்டங்களுக்கான மொழித்தேர்ச்சிகளை இவை வழங்குகின்றன.

18/2020 சுற்றுநிருபத்திற்கு அமைவாக வழங்கப்படும் இரண்டாம் மொழி (சிங்களம் /தமிழ்) பயிற்சிப் பாடநெறிகள

- பதவி நிலை உத்தியோகத்தர்களின் பொருட்டு 200 மணித்தியால இரண்டாம் மொழி (சிங்களம் / தமிழ்) பாடநெறிகள்
- இடை நிலை உத்தியோகத்தர்களின் பொருட்டு 150 மணித்தியால இரண்டாம் மொழி (சிங்களம் / தமிழ்) பாடநெறிகள்
- ஆரம்ப நிலை உத்தியோகத்தர்களின் பொருட்டு 100 மணித்தியால இரண்டாம் மொழி (சிங்களம் / தமிழ்) பாடநெறிகள்

இரண்டாம் மொழிப் பாடநெறிகள் மொழித் தடைகளை கட்டியமைப்பதற்கும், கலாசார புரிந்துணர்வை மேம்படுத்துவதற்கும், சிறப்பான நிர்வாகம் மற்றும் சிற்ந்த அரச சேவையினை வழங்குவதற்கும் அடிப்படையாக அமைகின்றன.

அரச ஊழியர்களின் மொழிப் பயிற்சிகளை நிறைவு செய்யும் வண்ணம் நிலட் நிறுவனம் மேலதிகப் பாடநெறிகளையும் வழங்குகின்றது.

ஆசிரியர் பயிற்சிப் பாடநெறிகள .

50 மணித்தியால ஆரம்ப ஆசிரியர் பயிற்சிப் பாடநெறி நிகழ்நிலை ஆசிரியர் பயிற்சிப் பாடநெறி மொழி பயிற்றுவித்தல் தொடர்பில் நிலட் நிறுவனம் சிறந்த கல்வியியலாளர்களை உருவாக்குவதில் முன்நிற்கின்றது. அடிப்படை சிறுவர் கல்வி தெடர்பான திறன்களுடன் கூடிய சிறந்த பாடங்களை தயாரித்து வழங்கும் ஆற்றல் கொண்ட வளவாளர்களை உருவாக்குவதாக இப்பாடநெறிகள் அமைகின்றன.

சான்றிதழ் மற்றும் டிப்ளோமா பாடநெறிகள

- சைகை மொழி சான்றிதழ்ப் பத்திரப பாடநெறி
- புடையெழுத்து சான்றிதழ்ப் பத்திரப் பாடநெறி
- ஆங்கில மொழி சான்றிதழ்ப் பத்திரப் பாடநெறி
- ஹிந்தி மொழி சான்றிதழ்ப் பத்திரப் பாடநெறி
- கொரிய சான்றிதழ்ப் பத்திரப் பாடநெறி
- யப்பான் மொழி சான்றிதழ்ப் பத்திரப் பாடநெறி
- பிரஞ்சு மொழி
- இரண்டாம் மொழி கற்பித்தல் தொடர்பான ஆசிரியர் பயிற்சிப் பாடநெறி
- மொழிபெயர்ப்பு டிப்ளோமா பாடநெறி
- ஹிந்தி டிப்ளோமா பாடநெறி இரண்டாம் மொழி தமிழ் / சிங்களம் டிப்ளோமா பாடநெறி

தனிப்பட்டவர்களுக்கும், தொழிற்தகைமையுடை - யவர்களுக்கும் மொழியியல் தேவைகளை நிறைவு செய்யும் வண்ணம் நிலட் நிறுவனம் பல்வேறுபட்ட சான்றிதழ், மற்றும் டிப்ளோமா பாடநெறிகளை வழங்குகின்றது. இத்தகைய பாடநெறிகள் இன்றைய உலகில் இன்றியமையாதவையாகக் காணப்படுகின்ற அதேவேளை, வேகமாக மாறும் உலகில் தனிப்பட்ட மற்றும் தொழில்வாழ்க்கைக்கு பெரிதும் உதவுகின்றன.

நிலட் வழங்கிக்கொண்டிருக்கின்ற சேவைகளில் மொழித் தேர்ச்சியானது மூடப்பட்டிருக்கும் பல்வேறு கதவுகளை திறக்கின்ற ஒரு திறவுகோலாகக் காணப்படுகின்றது. இப்பாடநெறிகள் பங்குபற்றுநர்களுக்கு பல்வேறு மொழிகளில் தகைமையுடையவர்களாக மாறுவதற்கான திறனை வழங்குவதோடு உலகலாவிய ரீதியாகப் பேசப்படும் ஆங்கிலம், பிரஞ்சு ஆகிய மொழிகள் மற்றும் விசேட சைகை மொழி மற்றும் புடையெழுத்து மொழி தொடர்பான திறன்களையும் வழங்குகின்றது. சிறப்பான தொடர்பாடலுக்கு மொழித்தேர்ச்சி இன்றியமையாததாகக் காணப்படுகின்றது.

உலக மொழிகள் தொடர்பான நிலட் நிறுவன பாடநெறிகள் தனிப்பட்டவர்களுக்கு அவர்களின் சர்வதேச வர்த்தகம், நிர்வாகம், கல்வியியல் போன்ற துறைகளில் காணப்படுகின்ற சிக்கல்களைத் தீர்ப்பதற்கு வழிகாட்டுவதாக அமைகின்றன. இம்மொழிகள் தொடர்பான தேர்ச்சி அடிவானத்தை விரிவுபடுத்தி உலகலாவிய ரீதியில் கல்வி, தொழிற்துறை, சலாசாரம் போன்ற துறைகளில் பல்வேறு வாப்புக்களை வழங்குகின்றது.

சைகை மொழி மற்றும் புடையெழுத்து பாடநெறிகளை உள்வாங்கிக் கொண்டமை NILET நிறுவனம் மேற்கொள்கின்ற அர்ப்பணிப்பிற்கு சான்றாகவும் அமைகின்றது. இத்தகைய சிறப்பான பாடநெறிகள் கண் தெரியாதவர்கள், காது கேளாதவர்களுக்கு காணப்படுகின்ற தொடர்பாடல் தடைகளை நீக்கி அவர்களையும் சமூகத்தில் உள்வாங்கிக்கொள்வதற்கு வழிசமைக்கின்றன.

அத்தகைய மொழித்தேர்ச்சிப் பாடநெறிகள் ஒரு கற்றல் பயணமாக மாத்திரம் அமையாது உவகலாவிய மொழியியல் கல்வகைமைக்கும் அடிப்படையாக அமைகின்றன. பங்குபற்றுநர்கள் மொழியியல் தடைகளை உடைத்தெறிதல், சிறப்பான தொடர்பாடல்களை மேற்கொள்ளுதல் மற்றும் கலாசாரப் புரிந்துணர்வு தொடர்பான அறிவினைப் பெற்றுக்கொள்கின்றனர்.

NILET நிறுவனத்தின் சான்றிதழ் மற்றும் டிப்ளோமா பாடநெறிகள் பல் மொழி பேசுகின்ற உலகில் தனிப்பட்டவர்களும், தொழிற்தகைமையுடையவர்களும் என்றும் இணைந்திருப்பதற்கு வழிசமைக்கின்றன. இவை கலாசார உள்வாங்கல் மற்றும் புரிந்துணர்வு என்பவற்றின் மூலம் கல்விசார் மற்றும் தொழிற்சார் நன்மைகளை வழங்குகின்றன. நிலட்: எங்கே மொழி பேசப்படுகின்றதோ அங்கு வாய்ப்புக்களுக்கு எல்லைகள் இல்லை.

எங்களுடைய மாணவர்கள் என்ன சொல்கின்றார்கள்

என்னுடைய சம்பள உயர்வு மற்றும் பதவி உயர்வு என்பவற்றை எதிர்பார்த்தே நான் முதலில் இந்தப் பாடநெறியில் இணைந்து கொண்டேன். என்றாலும், நான் இந்த பாடநெறியின் மூலம் பல முன்னேற்றங்களை அடைந்தேன். தமிழ் மொழிய தொடர்பில் எனக்கு ஒரு விருப்பம் ஏற்பட்டது. இது போன்ற ஒரு அனுபவத்தை நான் முதலில் பெற்றுக் கொண்டதில்லை. ஒரு மொழியினைக் கற்றுக் கொள்வது தொழில் வாழ்க்கைக்கு மாத்திரம் அல்ல இது தனிப்பட்ட வாழ்க்கைக்கும் உதவியாக அமைகின்றது.

நான் ஒரு அரச ஊழியர் என்னும் வகையில் NILET நிறுவனத்தின் இரண்டாம் மொழிப் பாடநெறி ஒரு புதுமையான அனுபவம் என்பதை நான் கட்டயம் கூறுதல் வேண்டும். இங்கு பயன்படுத்தப்பட்ட கற்பித்தல் முறைமைய ஒரு வித்தியாசமான கற்பித்தல் முறமையாகும். இது மொழி மற்றும் கலாசாரம் இரண்டையும் வெளிப்படுத்துகின்றது. இந்த பிரத்தியேக முறைமை என்னுடைய மொழித் திறனில் மாத்திரம் தங்கியிருக்கவில்லை.

இது மொழிக்கும் கலாசாரத்திற்குமான ஒரு இணைப்பாகக் காணப்படுகின்றது.

மொழியானது தொடர்பாடலுக்கான ஒரு ஊடகம் மாத்திரம் அல்ல, இது பிற கலாசாரங்களை விளங்கிக்கொள்வதற்கும் அவற்றைப் புரிந்துகொள்வதற்கும் அடிப்படையாக அமைகின்றது. எனது இரண்டாம் மொழி சிங்கள மொழித் தேர்ச்சியை பாலங்களுக்கிடையிலான இடைவெளிகளை நிரப்புவதற்கும், புரிந்துணர்வை கட்டியெழுப்புவதற்கும், எனது திணைக்களம் மற்றும் சமூகத்தில் கலாசார பல்வகைமையை உள்வாங்குவதற்கும் பயன்படுத்தலாம் என நினைக்கின்றேன்.

ஆங்கிலம், ஹிந்தி, கொரியன், யப்பான், மற்றும் பிரஞ்சு மொழி பாடத்திட்ட விருத்தி

தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் இலங்கை மக்களுக்கிடையில் தொடர்பாடல் திறனை விருத்தி செய்கின்ற தனியாள் வளர்ச்சி, கலாசாரப் புரிந்துணர்வு, பொருளாதார அபிவிருத்தி என்பவற்றை மேம்படுத்தும் வகையில் மொழித்தேர்ச்சியை வழங்குவதை நோக்காகக் கொள்கின்றது.

சுதெச மொழிகளுக்கு அப்பால் தொடர்பாடல் திறனை மேலும் விருத்தி செய்யும் வகையில் NILET நிறுவனம் ஆங்கிலம், ஹிந்தி, கொரியன், யப்பான், மற்றும் பிரஞ்சு மொழிகளுக்கான பாடத்திட்டங்களை விருத்தி செய்தது. சர்வதேச உலகில் வினைத்திறன்மிக்க வகையில் செயற்படக்கூடிய தனியாட்களை உருவாக்குவது எமது நோக்காகக் காணப்படுகின்றது.

இந்நிலையில் NILET ஹிந்தி மொழி மற்றும் பிரஞ்சு மொழிகளுக்கான சான்றிதழ்ப் பத்திர பாடநெறிகளை வெற்றிகரமாக ஆரம்பித்தது. இந்த பாடநெறிகள் வெறுமனே மொழியினைக் கற்பிப்பதை மாத்திரம் இலக்காகக் கொள்ள வில்லை. கலாசாரத்திற்கும் ஒரு பெரும் மதிப்பளித்து மொழியோடு இணைத்துள்ளது. இந்த பாடநெறி தொடர்பில் பங்குபற்றுநர்கள் அவர்களுக்கு மொழியியல் எல்லைகளுடன் தொடர்புடைய திறன்களைப் பெற்றுக்கொள்வதற்கு கிடைத்த வாய்ப்புக்கு நன்றிகளைத் தெரிவிக்கின்றனர்.

பல்வேறு துறைகளிலும் வெற்றிகரமாக தொடர்பாடல் ஒரு முக்கியமான சொத்தாகக் காணப்படுகின்றது. மொழிப் பாடநெறிகள் தனியாட்களுக்கு பல்வேறு பின்புலங்களிலும் தொழிற்துறைகளிலும் வசதிகளை வழங்குகின்றது.

இந்த மொழிப் பாடநெறிகளை வழங்குவதன் மூலம் சமூகத்தில் மொழித் தடைகள் மேலெழும் சந்தர்ப்பங்களில் சமூகத்திற்கு மிகவும் சிறப்பாகப் பங்களிக்க எதிர்பார்க்கின்றது. இதன் மூலம் ஒருங்கிணைப்பு மற்றும் புரிந்துணர்வை ஏற்படுத்துகின்றது.

ஹிந்தி மற்றும் பிரெஞ்சு பாடநெறிகளின் வெற்றியானது மேலும் வளர்ச்சி நோக்கிப் பயணிப்பதற்கு வழிவகுத்துள்ளது. எமது நாட்டின் இயங்குநிலை மொழியியல் நிலப் பரப்பை பிரதிபலிக்கும் வகையில் மேலதிக மொழிகளுக்கான பாடத் திட்டங்களை உருவாக்குவதில் நாங்கள் தீவிரமாகப் பணியாற்றி வருகின்றோம். இந்த முயற்சிகள் தரமான கல்வியை வழங்குவதற்கும், மொழிப் புலமையானது தனிப்பட்ட மற்றும் சமூக முன்னேற்றத்துக்கான பாலமாக உள்ள அதேவேளைதடையாக இல்லாத சூழலை ஏற்படுத்துவதற்குமானதாக NILET இனது இந்த அர்ப்பணிப்புடனான முயற்சிகள் அமைந்துள்ளன. NILET ஆனது பாராளுமன்றத்தினைச் சார்ந்த ஊழியர்கள் மற்றும் இலங்கை வங்கி ஊழியர்கள் உட்பட பலதரப்பட்ட குழுக்களை இலக்கு நோக்கியதான விஷேட ஆங்கிலப் பாடநெறிகளை ஆரம்பித்துள்ளது.

NILET ஆனது பல்வேறு தொழில்வாண்மையாளர்களின் தொழிற் தேவையின் பொருட்டான வினைத் திறனான தொடர்பாடலை மேற்கொள்வதற்குரிய மொழித் திறனைப் பெற்றுக் கொள்வதற்காக மற்றும் விஷேட மொழித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக இந்தப் பாடநெறிகளை வடிவமைத்துள்ளது.

NILET ஆனது பல்வேறுபட்ட குழுக்களின் பிரத்தியேகத் தேவைகளுக்கு துலங்கலை வெளிப்படுத்தும் வகையில் ஒழுங்கமைக்கப்பட்ட ஆங்கிலப் பாடநெறிகளை வழங்கக் கூடியதாக உள்ளதையிட்டுப் பெருமையடைகின்றது. எந்தவொரு ஒழுங்கமைக்கப்பட்ட நிறுவனத்திலும் மொழிப் புலமையானது தொடர்பாடல் விருத்தி, உற்பத்தித் திறன் மற்றும் ஒட்டுமொத்த வினைத்திறன் என்பவற்றிலும் மொழித் திறனானது மிக முக்கியமான வகிபங்கினை வகிக்கின்றது. அதற்கிணங்க எங்களது வழமைப்படுத்தப்பட்ட ஆங்கிலப் பயிற்சிப் பாடநெறியானது பங்குபற்றுநர்களின் வகிபங்கு மற்றும் பொறுப்புடைம என்பவற்றிற்கு அமைவாக பங்குபற்றுநர்களது வலுவை விருத்தி செய்யக் கூடியதாகவும் பிரயோக ரீதியானதாகவும் அமைந்துள்ளது.

நாங்கள் எமது மொழிப் பயிற்சிப் பாடநெறிக்கான கேள்வியை அதிகரித்து பொது மக்களுக்கான புதிய சந்தர்ப்பங்களுக்கான கதவுகளினைத் திறந்து விடுவதற்காக எதிர்பார்த்துள்ளோம். நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. வரவிருக்கும் பாடநெறிகளானது பிரயோக ரீதியிலான தொடர்பாடல் திறன், கலாசார விழிப்புணர்வு மற்றும் தனிப்பட்ட வளர்ச்சி தொடர்பில தொடர்ந்தும் கவனம் செலுத்தும். இந்த மொழிப் பாடநெறிகள் தனிநபர்களை உலகத் தரம் வாய்ந்ததான வினைத்திறனான தொடர்பாடல்களை மேற்கொள்வதற்கான NILET இனது அர்ப்பணிப்பு குறிப்பிடத்தக்கதாகும்.

எங்களைப் பற்றி விளம்பரம் செய்வதற்கு...

சைகை மொழியில் சான்றிதழ் பத்திரப் பாடநெறி

கேட்டல் மற்றும் பேச்சுக் குறைபாடுடைய தனிநபர்களின் உத்தியோகபூர்வ மற்றும் முறைசார் தொடர்பாடல் வழியாக சைகை மொழிக்கான அங்கீகாரம் அதிகரித்து வருவதன் பிரதிபலனாக தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனமானது (NILET) சைகை மொழிப் பத்திரப் பாடநெறியினை முன்னோடியாக அறிமுகம் செய்கின்றது.

இதற்குரிய ஆரம்பம், வழிகாட்டல் என்பன முன்னாள் கௌரவ அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் அவர்களினால் வழங்கப்பட்டிருந்தது.

NILET இனது தலைவர் திரு. ஜயம்பதி பண்டார ஹீன்ஹெந்த மற்றும் NILET இனது பணிப்பாளர் நாயகம் கலாநிதி பிரசாத் ஆர். ஹேரத் ஆகியோர் NILET இனது அர்ப்பணிப்பான சேவையினை வழமையான மொழிப் பயிற்சிப் பாடநெறிகளின் எல்லைகளுக்கு அப்பால் இட்டுச் செல்வதினை இலக்காகக் கொண்டிருந்தனர். உடலியல் இயலாமை உடையவர்களிடையே காணப்படுகின்ற தொடர்பாடல் இடைவெளியினை நிவர்த்தி செய்வதும் சைகை மொழியினது வகிபங்கினை வலியுறுத்துவதுமே இதனது நோக்கமாகும்.

2017 ஆம் ஆண்டில் இலங்கையில் அரச கரும மொழியாக அறிவிக்கப்பட்ட சைகை மொழியானது செவித் திறன் மற்றும் பேச்சுக் குறைபாடுடையவர்களுக்கான முதன்மையான தகவல் தொடர்பு சாதனமாகக் காணப்படுகின்றது. இது கை மற்றும் புயங்களின் மூலமான சைகைகள், முக பாவனைகள், கண்ணிமை அசைவுகளினூடாக வாய்மூலமாக அன்றி எண்ணங்களையும் கருத்துக்களையும் பரிமாற்றுகின்ற சிக்கலான ஒரு முறை ஆகும் (Sharma 2013). சமூக மேம்பாடுகள், நலன்புரி மற்றும் கண்டிய மரபுரிமைகள் அமைச்சினால் வெளியிடப்பட்ட தரவுகளின்படி சைகை மொழியானது மிகவும் முக்கியமான ஒன்றென்பது நிரூபிக்கப்படுகின்றது. 22 மில்லியன் சனத்தொகையினைக் கொண்ட இலங்கையில் ஏறத்தாழ 400,000 பேர் கேட்டல் குறைபாடுடையவர்கள் என்பது மேற்படி தரவுகளானது வெளிப்படுத்தப்படுகின்றது. இந்த எண்ணிக்கையானது தொடர்ச்சியான சடுதியான அதிகரிப்பினைக் காட்டுவதானது மேற்படி குறைபாடுடையவர்களது பல்வேறு துறைகள் தொடர்பான அதிகரிக்கப்பட்ட வசதிகள் மற்றும் நலன்புரி ஏற்பாடுகளினது தேவைப்பாடுகளினை வலியுறுத்திக் காட்டுகின்றது.

NILET இனது சைகை மொழி சான்றிதழ்ப் பாடநெறியானது கொவிட் 19 சவால்களுக்கு மத்தியிலும் ஆரம்பிக்கப்பட்டது. நிகழ் நிலைக் கற்றலின் ஆற்றலைப் பயன்படுத்துவதற்கும் அனைவருக்கும் கல்விக்குமான அணுகலை உறுதி செய்வதற்கும் இப் புதுமையான நடவடிக்கையானது 2021 ஆம் ஆண்டு ஜனவரி 21 ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன் இந்த நிகழ் நிலைக் கற்றலுக்காக நாட்டின் அனைத்து மூலைகளிலிருந்தும் பங்கேற்கக்கூடியதாக இருந்துள்ளது. ஒரு விரிவான பாடத் திட்டத்தினை வழங்குவதனை நோக்காகக் கொண்ட இப் பாடநெறியானது மொத்தம் 34 பங்கேற்பாளர்களுக்கு இடமளிக்கும் வகையில் இரண்டு குழுக்களாக கட்டமைக்கப்பட்டிருந்தது.

பாடத் திட்டமானது சைகை மொழியின் அடிப்படைகள், அடிப்படைத் தகவல் தொடர்பு நுட்பங்கள் மற்றும் சைகை மொழி பெயர்ப்பாளர்களின் முக்கிய பங்கு உள்ளிட்ட பல்வேறு பாடங்களைக் கொண்ட பரந்த வீச்சினைக் கொண்டமைந்தது.

இலங்கையில் சைகை மொழித் துறையில் முக்கிய பிரமுகர்களாக விளங்கும் திருமதி. சம்மி டயஸ் மற்றும் திரு. சாமர விஜேசிங்க ஆகியோரின் நிபுணத்துவ பங்களிப்பானது இப் பாட நெறியின் வெற்றிக்கு காரணமாக அமைந்துள்ளது. அவர்களது வழிகாட்டுதல் மற்றும் அர்ப்பணிப்பானது கற்றல் அனுபவத்தினைப் போசணைப்படுத்தியதுடன் பங்குபற்றுநர்கள் சைகை மொழியில் திறமையை வெளிப்படுத்துவதற்கும் உறுதுணையாக இருந்துள்ளது.

2021 ஆம் ஆண்டு ஜனவரி 2 ஆம் திகதியிலிருந்து 2012 ஆம் ஆண்டு டிசம்பர் 24 ஆம் திகதி வரையான ஏறத்தாழ ஒரு வருட காலத்தில் இடைத் தொடர்புகளை ஏற்படுத்தும் நிகழ்நிலை அமர்வுகள், விரிவுரைகள் மற்றும் பிரயோகப் பயிற்சிகள் என்பவற்றில் பங்குபற்றுநர்கள் ஈடுபட்டிருந்தனர். இந்த அணுகுமுறையானது பேச்சு மற்றும் செவித் திறன் குறைபாடுடைய நபர்களுடன் வினைத் திறனாகத் தொடர்பு கொள்வதற்குரிய திறன்களை அவர்களுக்கு வழங்குவதை நோக்கமாகக் கொண்டமைந்தது. பங்குபற்றுநர்கள் மற்றும் வளவாளர்கள் ஆகிய இரு தரப்பினரும் வெளிப்படுத்திய உற்சாகமானது பாடநெறியின் ஒட்டுமொத்த வெற்றிக்கு பங்களிப்புச் செய்திருந்தது.

இந்த முயற்சியின் தனித்துவமான அம்சம் என்னவெனில் அனைத்து பங்குபற்றுநர்களும் செவித்திறன் அற்றவர்கள் என்பதுடன் தனிநபர் ரீதியாக சமூகத்திற்கு சேவை செய்ய வேண்டும் என்ற ஆழ்ந்த உந்துதல் பெற்றவர்கள். சமூகத்தின் மேம்பாட்டிற்கு பங்களிப்பதற்கான இந்த அர்ப்பணிப்பானது அணுகல் தன்மையை வளர்ப்பதன் மூலமான பொருளாதார மற்றும் சமூக முக்கியத்துவத்தைப் பற்றிய அவர்களின் புரிதலை வெளிப்படுத்தியது.

NILET இனால் ஆரம்பிக்கப்பட்ட சைகை மொழிச் சான்றிதழ் பாடநெறிக் கற்கையானது வழமையான எல்லைகளுக்கு அப்பால் கல்வி எல்லைகளை விரிவுபடுத்துவதற்கான நிறுவனத்தின் அர்ப்பணிப்பினை எடுத்துக் காட்டுகின்றது. தொலை நோக்கு ரீதியான தலைமை, தொழில்நுட்ப புதுமை மற்றும் அர்ப்பணிப்புள்ள வளவாளர்களின் நிபுணத்துவம் என்பவற்றின் மூலம் பேச்சு மற்றும் செவிப்புலன் குறைபாடுடைய குடிமக்களுக்கு வளவாளர்களாகப் பணியாற்றுவதினை நோக்கமாகக் கொண்ட தனிநபர்களுக்கான பயனுள்ள தகவல் தொடர்பு மற்றும் தனிநபர் வளர்ச்சியினை மேம்படுத்துவதற்கான அதனது இலக்கினை பாடநெறியானது வெற்றிகரமாக அடைந்துள்ளது. சைகை மொழியில் வளவாளர்களாக செவித்திறன் மற்றும் பேச்சு குறைபாடுடைய தனிநபர்களின் அதிக பங்கேற்பையும் ஒருங்கிணைப்பையும் வளர்ப்பதன் மூலம் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி அழுத்தத்தினை அதிகரிக்கின்றது.



“பங்குபற்றுதல்
பிரதிபலித்தல்
இதயத்தில் பதிவிடல்-
கற்றல் கற்பித்தல்
முறைமை”

PRH Methodology

பங்குபற்றுதல் பிரதிபலித்தல் இதயத்தில் பதிவிடல்- கற்றல் கற்பித்தல் முறைமை

தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் (NILET) வினைத்திறனான மொழிக் கல்விக்கான எங்களது அசைக்க முடியாத அர்ப்பணிப்பானது புதுமையான மற்றும் சிறப்பான பயணத்தினை நோக்கி எங்களினை இட்டுச் சென்றுள்ளது. எங்களது பணிப்பாளர் நாயகம் கலாநிதி. பிரசாத் ஆர். ஹேரத் அவர்களது தொலை நோக்குப் பார்வையுடனான தலைமைத்துவத்தின் கீழ் மிக நுணுக்கமாக உருவாக்கப்பட்ட மாற்றியமைக்கும் அணுகுமுறையான புதிய PRH முறைமையே இந்தப் பயணத்திற்கான மையமாகும்.

கலாநிதி. ஆர். பிரசாத் ஹேரத் அவர்களது PRH முறைமைக்கான உத்வேகமானது பல்வேறு பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களில் இரண்டாம் மொழிப் பயிற்சிச் செயற் திட்டங்களைப் பற்றிய அவரது உன்னிப்பான அவதானிப்புக்களிலிருந்து உருவானது. ஒருசிறந்த மொழிக் கல்வியியலாளர் மற்றும் பயிற்றுவிப்பாளராக தனது ஆழ்ந்த நுண்ணறிவு மற்றம் நிபுணத்துவத்துடன் ஆயுதம் ஏந்திய அவர் வயது வந்தவர்களுக்கான மொழிப் பயிற்றுவிப்பை மறுவரையறை செய்யும் பணியினை மேற்கொண்டிருந்தார். இதன் விளைவான சக்தி வாய்ந்த கருவியான PRH ஒரு மகிழ்ச்சியான மற்றும் வளமான மொழிக் கற்றல் அனுபவத்தினை ஊக்கபடுத்துகின்றது.

PRH முறைமையானது பயனுள்ள மொழிக் கல்வியினை வளர்ப்பதில் NILET இனது அர்ப்பணிப்புடன் கூடிய செயற்பாட்டிற்கு சான்றாக அமைகின்றது. இது போதனை முறை மற்றும் வயதுவந்தவருக்கான கல்வியியலில் ஒத்திசைவான இனைவினைக் குறிக்கின்றது. மொழியினைக் கையகப்படுத்துதல் வெறுமனே கற்றலினைக் கடந்த மகிழ்ச்சியான முயற்சியாக மாறுவதினை உறுதிசெய்கின்றது. கருத்தியல் கற்றல், மூட்டுறவுக் கற்றல், பிரதிபலிப்புக் கற்றல் மற்றும் புலனாய்வுக் கற்றல் போன்ற தூண்களுடன் இம் முறையானது கலாசாரத்தினைக் கற்பிப்பதனையும் மேம்படுத்துகின்றது.

இன்றைய பரிணாம வளர்ச்சி பெற்ற கல்விப் பரப்பில் பாரம்பரியக் கல்வி அணுகு முறைமைகளானது புதிய அணுகு முறைமைகளுக்கு வழியமைக்கின்றன. NILET இனது PRH முறைமையிலான மொழிக் கற்பித்தலானது முன்னணியில் உள்ளது. மொழி என்பது வெறும் தகவல் தொடர்புக் கருவி என்பதனைவிட மேலானது என்பதனை அது அங்கீகரிக்கின்றது. இது கலாசார அடையாளம் மற்றும் பகிரப்பட்ட புரிந்துணர்வுகள் என்பவற்றின் கொள்கலன் ஆகும்.

வளவாளர்கள் 3341 பேருக்கு PRH முறைமையிலான கடுமையான பயிற்சியின் மூலமான தயார்ப்படுத்தலானது எங்களது அர்ப்பணிப்பினை நாடி பிடித்துப் பார்க்கக்கூடியதாக உள்ளது. இந்த வளவாளர்கள் வெறும் மொழிப் பயிற்றுவிப்பாளர்கள் மட்டுமல்ல. கலாசாரம், சாராம்சம் மற்றும் கற்றலின் போதான மகிழ்ச்சி வெளிப்பாடு என்பவற்றினைக் கருத்தில் கொண்டு முழுமையான அணுகுமுறைமையினைக் கடைப்பிடிக்கின்ற சாதனையாளர்கள. மனித வெளிப்பாட்டின் செழுமையான திரைச்சீலைக்கு ஆழ்ந்த பாராட்டுக்களை வழங்கும் அதேவேளை மொழித் திறன்களை வளர்த்துக்கொள்ள அவர்கள் தயாராக உள்ளனர்.

சாராம்சமாக, NILET இனது PRH முறைமையானது பயனுள்ள மொழி அறிவுறுத்தல் மற்றும் கலாசாரச் செறிவூட்டலின் ஆழமான தொகுப்பு ஆகும். இது பல்வேறு மொழியியல் சமூகங்களுக்கு இடையே ஒரு பாலமாக விளங்குகின்றது. நல்லிணக்கத்தினைப் புரிந்து கொள்ள உதவுகின்றது. இக் குறிப்பிடத்தக்க பணத்தினைத் தொடரும்போது PRH முறைமையானது மொழிக் கல்வியின் எதிர்காலத்திற்கு வழிகாட்டும் நட்சத்திரமாக விளங்குவதுடன் கற்பவர்கள் நம்பிக்கை, ஆர்வம் மற்றும் கலாசார விழுமியங்களுடன் தங்களது மொழியியல் பயணத்தினை தொடர்வதற்கு அதிகாரம் அளிக்கிறது.

கலாநிதி. ஆர். பிரசாத் ஹேரத்
பணிப்பாளர் நாயகம்
PRH முறைமையை உருவாக்கியவர்

மொழிக் கல்வியை மேம்படுத்துவது தொடர்பில் NILET மீதான NLEAP இனது செல்வாக்கு

தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனமானது (NILET) பெருமையுடன் தனது வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பிப்பதுடன் கனடா அரசாங்கத்தின் தாராள ஆதரவுடன் தேசிய மொழிகள் சமத்துவ முன்னேற்ற செயற்திட்டத்தின் (NLEAP) மூலம் வழங்கப்பட்ட முக்கியமான ஆதரவினையும் அடிக்கோடிட்டுக் காட்டுகின்றது. NLEAP ஆனது NILET உடன் இணைந்து அரசகரும மொழிக் கொள்கையின் அமுலாக்கத்தை வலுப்படுத்தும் அதே வேளையில் மொழி உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் நிறுவனத்தின் நோக்கத்தினை நனவாக்குவதில் முக்கிய பங்கு ஆற்றியுள்ளது.

பாலின சமத்துவம், பெண்கள் மேம்பாடு (GEWE) மற்றும் பாலின அடிப்படையிலான பகுப்பாய்வு மிகை (GBA+) என்பவற்றின் முன்னேற்றத்தில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான ஆதரவானது NLEAP இடமிருந்து கிடைக்கப் பெற்ற குறிப்பிடத் தக்கதாகும். NILET இன் செயற்பாடுகளில் இந்தக் கோட்பாடுகளின் ஒருங்கிணைப்பு அதன் பயிற்சித் திட்டங்களின் தரத்தினையும் உள்ளடக்கத்தினையும் மேம்படுத்தியுள்ளது. NLEAP உதயின் மூலம் NILET நிறுவனமானது அறிவினை வழங்குகின்றதில் பெரும் பங்காற்றுகின்ற வளவாளர்களைப் பயிற்றுவிக்கவும் நிறுவனத்திற்குள்ளே பாலின உணர்வு தொடர்பான பயிற்சியினை வழங்கக்கூடியதகவும் இருந்துள்ளது.

NLEAP இனால் வசதிகள் அளிக்கப்பட்டு நிறுவப்பட்டு அதிகாரமளிக்கப்பட்ட NILET இனது ஆய்வு அலகானது ஒரு மிக முக்கியமான சாதனையைப் பிரதிபலிக்கின்றது. NLEAP இனால் வழங்கப்பட்ட தொழில்நுட்ப உதவியானது இந்த ஆராய்ச்சி அலகுக்கு அடித்தளம் அமைப்பதில் ஒரு முக்கிய பங்கைக் கொண்டிருந்ததுடன் மேலும் நிறுவனத்தின் ஆராய்ச்சித் திறன்களை வலுப்படுத்தியது. இந்த மைல்கல் ஆழமான உட்பொருளைக் கொண்டுள்ளது. ஏனெனில் இது NILET இனது ஆராய்ச்சி நோக்கங்களின் கடுமையையும் வினைத் திறனையும் அதிகரிக்கின்றது. இதன் மூலம் நாட்டிற்கு மொழிக் கல்வி தொடர்பான ஒரு ஆராய்ச்சியில் கணிசமான முன்னேற்றங்களை ஊக்குவிக்கின்றது.

திறன் மேம்பாடு மற்றும் அறிவுப் பகிர்வு ஆகியவற்றில் NLEAP இனது அர்ப்பணிப்பானது செயற்திட்டக் காலத்தின் முடிவில் ஒரு சிம்போசியம் அமைப்பதன் மூலம் மேலும் எடுத்துக் காட்டப்படுகின்றது. இந்த சிம்போசியமானது NILET உடனான NLEAP இனது ஒத்துழைப்பின் பரதரப்பட்ட செயற்பாடுகள் மற்றும் விளைவுகளை வெளிப்படுத்தும் ஒரு தளமாகச் செயற்பட்டது. இது பங்குதாரர்களுக்கு செயற்திட்டத்தின் தாக்கத்தினைப் பற்றிய உள்ளார்ந்த அறிவினை பெறுவதற்குரிய கட்டமைப்பொன்றினை வழங்கியதுடன் NILET மற்றும் NLEAP இடையேயான பயனுள்ள பங்காண்மைக்கு ஒரு சான்றாக அமைந்துள்ளது.

முடிவாக, பாலின சமத்துவத்தினை மேம்படுத்துதல், ஒன்லைன் பாடத்திட்டத்தினைத் தயாரித்தல் மற்றும் வலுவான ஆராய்ச்சி அலவினை நிறுவுதல் ஆகியவற்றில் சிறப்புக் கவனம் செலுத்துவதன் மூலம் NILET இனது பயிற்சி நடவடிக்கைகளை மேம்படுத்துவதில் NLEAP ஆனது முக்கியமான ஆதரவினை வழங்கியுள்ளது. இந்தச் சாதனைகள் NILET இனது நோக்கக் கூற்றான மொழி உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் அரச கரும மொழிக் கொள்கையின் அமுலாக்கத்தினை வலுப்படுத்துதல் ஆகியவற்றுடன் ஒத்திசைகின்றன. NILET தனது பயணத்தினைத் தொடரும்போது NLEAP இனால் வழங்கப்பட்ட அசைக்க முடியாத ஆதரவிற்கு நன்றியுடன் இருப்பதுடன் மொழிக் கல்வி மற்றும் ஆராய்ச்சித் துறையில் மேலும் ஆக்க பூர்வமான முன்னேற்றங்களை எதிர்பார்த்து நிற்கின்றது.

மொழி ஒரு இணைப்புப் பாலமாக, கலாசாரம் ஒரு பிணைப்பாக, வடக்கு - கிழக்கு

இலங்கையில் மூன்று தசாப்தங்களுக்கு மேலாக நடைபெற்ற இனப் பிரச்சனையானது ஆறாத காயங்களை வடக்கு கிழக்கு மாகாணங்களில் விட்டு வைத்துள்ளது. இருந்த போதிலும் அக் காயங்களைக் குணமாக்கும் பொறிமுறையின் ஆரம்ப அடையாளமாக 2007 ஆம் ஆண்டில் தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டு கடந்த நெருக்கடி காலத்தின் பின்னரும் நீடிக்கப்படுகின்றது. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இதயங்களைச் சீர்ப்படுத்தக் கூடிய ஆற்றல் உள்ள கருவியாக மொழி மற்றும் கலாசாரம் ஊடான புரிந்துணர்வு என்பதையே தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனமானது அங்கீகரிக்கின்றது.

தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனமானது குடிமக்களுக்கிடையேயான கலாசார மற்றும் இனரீதியான இடைவெளிகளை குறைப்பதற்கான அதுவும் குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணங்களைக் குவியப்படுத்தியதான பாலத்தை அமைக்கும் நோக்கில் செயற்படத் தொடங்கியது. திறைசேரி ஒதுக்கீடுகள் அற்ற காலங்கள் உட்பட பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்த போதிலும் இந்த பிராந்தியங்களிலுள்ள பொதுமக்கள் மற்றும் அரச அலுவலர்கள் ஆகிய இரு தரப்புக்கும் இரண்டாம் மொழிப் பயிற்சித் திட்டங்களை வழங்குவதான அதனது உறுதிப்பாட்டில் அசையாது நின்றது.

உதாரணமாக 2022 ஆம் ஆண்டில் மட்டும் தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனமானது 23 சிங்கள / தமிழ் மொழிப் பயிற்சித் திட்டடங்களை வழங்கியுள்ளது. இதன் மூலம் கிழக்கு மாகாணத்தில் உள்ள சுமார் 1200 அரச உத்தியோகத்தர்கள் பயன் அடைந்துள்ளனர். குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய விடயம் என்னவெனில் இந்த மாகாணங்களில் உள்ள அரச உத்தியோகத்தர்கள் சிங்களம் கற்பதில் காட்டும் அதீத ஆர்வம் ஆகும். இந்த அதீத ஆர்வமானது பல ஆண்டுகளாக நீடித்து வந்த கலாசாரத் தடைகள் மற்றும் தவறான புரிதல்களை உடைப்பதற்கான சான்றாக அமைகின்றது.

தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தினது மொழிப் பயிற்சிச் செயற் திட்டமானது தனிப்பட்ட திறன்களை விருத்தி செய்வதனையும் கடந்ததாகச் செல்வாக்குச் செலுத்துகின்றது. இது கலாசாரப் பரிமாற்றம் மற்றும் பரஸ்பர புரிந்துணர்வினை செழிப்படையச் செய்வதற்கான வளர்ச்சியடைந்த சூழலினை ஏற்படுத்துகின்றது. இத் திட்டங்கள் அரச அலுவலர்களுக்கான மொழிப் புலமையை அதிகரிப்பதற்கு மட்டுமன்றி ஆழமாக வேரூன்றியிருக்கும் கலாசாரத் தடைகள் மற்றும் தவறான புரிதல்களை வேரோடு புடுங்கி எறிந்து மிகவும் இணக்கமான சகவாழ்வுக்கு வழிவகுத்துள்ளது.

தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் முயற்சிகளின் முக்கியத்துவம் மாகாணங்களுக்கு அப்பாற்பட்டது. வடக்கு மற்றும் கிழக்கு பிராந்தியங்களில் உள்ள மக்களின் மக்களின் இதயங்களையும் மனதையும் வெற்றிகொள்வதன் மூலம் தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனமானது அரச கரும மொழிக் கொள்கையை (OLP) செயல்படுத்துவதில் முக்கிய பங்கு வகிப்பதுடன் அரச சேவையினை வினைத்திறனுடன் செயற்படுத்தவும் உதவுகின்றது. இது மொழி என்பது வெறும் தகவல் தொடர்பு சாதனம் மட்டுமல்ல என்பதனை ஞாபகப்படுத்துவதுடன் மொழி என்பது ஒற்றுமை, புரிந்துணர்வு மற்றும் ஒளிமயமான எதிர்காலத்துக்கான ஒரு பாலம் என்பதனையும் ஞாபகப்படுத்துகின்றது.

மொழி கற்பித்தல் செயற்திட்டங்களை விரிவுபடுத்தும் முயற்சிகள் தொடர்பில் முன்னோக்கிப் பார்ப்போமானால் தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தினது தொலை நோக்கு தெளிவாக உள்ளது. இரண்டாம் மொழி சிங்கள டிப்ளோமா, மொழிப் பரிமாற்ற செயற்திட்டங்கள் மற்றும் மாணவர்களுக்கான மொழிப் பாசறைகள் என்பவற்றின் ஆரம்பமானது வானத்தை தொடுமளவிற்கு உள்ளது.

இந்த முயற்சிகள் கலாசாரத்தில் உயர்வான மற்றும் மொழியியல் பன்முகத்தன்மை கொண்ட இலங்கையைக் கட்டியெழுப்பும் சூழ்நிலையை மேம்படுத்தும் வாக்குறுதியைக் கொண்டுள்ளன. தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தினது பணியானது மொழியைக் கற்பிப்பது மட்டுமே அல்ல. இது ஒரே நேரத்தில் ஒரே இதயம் மற்றும் ஒரே சொல் என்ற அடிப்படையில் ஒன்றுபட்ட தேசத்தினைக் கட்டி எழுப்புவது பற்றிய பணி ஆகும்.



பாடநெறிகளின் தன்மை	பாடநெறிகளின் எண்ணிக்கை	பங்குபற்றுநர்களின் எண்ணிக்கை
திறைசேறி நிதியின் மூலம் நடாத்தப்பட்ட பாடநெறிகள்		
100 மணித்தியால சிங்கள / தமிழ் மொழிப் பாடநெறி	1	31
150 மணித்தியால சிங்கள / தமிழ் மொழிப் பாடநெறி	87	5,052
200 மணித்தியால சிங்கள / தமிழ் மொழிப் பாடநெறி	21	839
மொத்தம்	109	5922
வருமானம் ஈட்டப்பட்டு நடாத்தப்பட்ட பாடநெறிகள்		
100 மணித்தியால சிங்கள / தமிழ் மொழிப் பாடநெறி	20	711
150 மணித்தியால சிங்கள / தமிழ் மொழிப் பாடநெறி	193	10,497
200 மணித்தியால சிங்கள / தமிழ் மொழிப் பாடநெறி	26	889
மொத்தம்	239	12097
மொத்த எண்ணிக்கை	348	18019

அரச ஊழியர்களின் பொருட்டு 2022 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 2023 ஆம் ஆண்டு நிறைவு செய்யப்பட்ட மொத்த பாடநெறிகள் பற்றிய விபரம்

பாடநெறிகளின் தன்மை	பாடநெறிகளின் எண்ணிக்கை	பங்குபற்றுநர்களின் எண்ணிக்கை
திறைசேறி நிதியின் மூலம் நடாத்தப்பட்ட பாடநெறிகள்		
100 மணித்தியால சிங்கள / தமிழ் மொழிப் பாடநெறி	2	130
150 மணித்தியால சிங்கள / தமிழ் மொழிப் பாடநெறி	2	220
200 மணித்தியால சிங்கள / தமிழ் மொழிப் பாடநெறி	-	-
மொத்தம்	4	350
வருமானம் ஈட்டப்பட்டு நடாத்தப்பட்ட பாடநெறிகள்		
100 மணித்தியால சிங்கள / தமிழ் மொழிப் பாடநெறி	1	22
150 மணித்தியால சிங்கள / தமிழ் மொழிப் பாடநெறி	58	3,485
200 மணித்தியால சிங்கள / தமிழ் மொழிப் பாடநெறி	5	374
மொத்தம்	64	3881
மொத்த எண்ணிக்கை	68	4231

அரச ஊழியர்களின் பொருட்டு 2022 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட மொத்த பாடநெறிகளின் எண்ணிக்கை (நி)றைவு செய்யப்பட் மற்றும் தொடரும்)

பாடநெறிகளின் தன்மை	பாடநெறிகளின் எண்ணிக்கை	பங்குபற்றுநர்களின் எண்ணிக்கை
திறைசேறி நிதியின் மூலம் நடாத்தப்பட்ட பாடநெறிகள்		
100 மணித்தியால சிங்கள / தமிழ் மொழிப் பாடநெறி	3	161
150 மணித்தியால சிங்கள / தமிழ் மொழிப் பாடநெறி	89	5272
200 மணித்தியால சிங்கள / தமிழ் மொழிப் பாடநெறி	21	839
மொத்தம்	**113**	**6272**
வருமானம் ஈட்டப்பட்டு நடாத்தப்பட்ட பாடநெறிகள்		
100 மணித்தியால சிங்கள / தமிழ் மொழிப் பாடநெறி	21	733
150 மணித்தியால சிங்கள / தமிழ் மொழிப் பாடநெறி	251	13,982
200 மணித்தியால சிங்கள / தமிழ் மொழிப் பாடநெறி	31	1263
மொத்தம்	**303**	**15978**
மொத்த எண்ணிக்கை	**416**	**22250**

2022 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட சான்றிதழ் மற்றும் டிப்ளோமா பாடநெறிகள்

பாடநெறிகளின் தன்மை	பாடநெறிகளின் எண்ணிக்கை	பங்குபற்றுநர்களின் எண்ணிக்கை
சைகை மொழி சான்றிதழ் பத்திரப் பாடநெறி	2	20
பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்களுக்கான ஆங்கில மொழி பாடநெறி	7	280
பிரெஞ்சு மொழி சான்றிதழ் பத்திரப் பாடநெறி	1	14
இரண்டாம் மொழி சிங்கள டிப்ளோமா பாடநெறி	2	79
மொத்தம்	**12**	**393**

சாதாரண ஆசிரியர் பயிற்சிப் பாடநெறிகள் தொடர்பான விபரங்கள்

பாடநெறிகளின் தன்மை	பாடநெறிகளின் எண்ணிக்கை	பங்குபற்றுநர்களின் எண்ணிக்கை
சாதாரண ஆசிரியர் பயிற்சிப் பாடநெறிகள்	3	141
மொத்தம்	3	141

கண்காணிப்பு மற்றும் பின்தொடரல் அமர்வுகள்

பாடநெறிகளின் தன்மை	பாடநெறிகளின் எண்ணிக்கை	பங்குபற்றுநர்களின் எண்ணிக்கை
கண்காணிப்பு மற்றும் பின்தொடரல்	8	521
மொத்தம்	**8**	**521**

மொழியையும் கலாசாரத்தையும் பிரயோக அடிப்படையில் கற்கும் முறை

18/2020 சுற்றறிக்கையின்படி இரண்டாம் மொழி சிங்களம்/தமிழ் கற்கைநெறி



சான்றிதழ் மற்றும் டிப்ளோமா பாடநெறிகள் 2022



அரச உத்தியோகத்தர்களுக்கான இரண்டாம் மொழி (சிங்களம்/தமிழ்) கற்கைநெறி



அரச உத்தியோகத்தர்களுக்கான சிங்களம்/தமிழ் மொழிக் கற்கைநெறிகளில் அரச உத்தியோகத்தர்களின் பங்கேற்பு



நிதி முன்னேற்ற அறிக்கை
2019 முதல் 2022 வரை

நடைமுறைச் செலவுகள்



ஈட்டப்பட்ட வருமானம்



மூலதனச் செலவுகள்



இலாபம் / நட்டம்



பெறப்பட்ட வருமானம்



2022 கிடைக்கப்பெற்ற வருமானம்



சேமிப்பு - நிலையான வைப்பு



நிறுவனத்தின் தற்போதைய நிதி நிலைமைகள்

நிறுவனத்தின் கடந்த கால செலவுகள் தொடர்பாக கவனம் செலுத்தும்போது நடைமுறைச் செலவுகளாக 75 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது. அதே போன்று இந்நிறுவனம் 2022 ஆம் அண்டு பயிற்சி பாடநெறிகளின் மூலம் கிடைக்கப்பெற்ற சுத்த இலாபமாக 58% காணப்படுகின்றது. 2023 ஆம் ஆண்டு முதல் இந்நிறுவனத்தை சுய இலாபமீட்டும் ஒரு நிறுவனமாக கொண்டு செல்வதற்கான முன்மதிப்பீடு வருமாறு:

பயிற்சி பாடநெறிகள் மீதான தேறிய இலாபம	- 2022	Rs.60,078,987
பயிற்சி பாடநெறிகள் மீதான தேறிய இலாபம	- 2022	58%
வருடாந்த பொது நடைமுறைச் செலவுகள்	- 2022	Rs. 74,407,175

எதிர்பார்க்கப்படும் இலாபம்	பகுதிகள்	10,000,000.00	25,000,000.00	50,000,000.00
எதிர்பார்க்கப்பட்ட வருடாந்த இலாபம்	Rs. 128,304,259	Rs. 145,547,792	Rs. 171,413,092	Rs.214,521,925
	Rs. 10,692,022	Rs. 12,128,983	Rs. 14,284,424	Rs. 17,876,827

நிறுவனத்தின் முதல் ஏழு மாதங்கள் கிடைக்கப்பெற்ற வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு 30.60 மில்லியன் தொகை நடைமுறைச் செலவுகளின் பொருட்டு பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதோடு திறைசேரியிலிருந்து மூலதனச் செலவுகளின் பொருட்டு எவ்வித நிதியும் பெற்றுக்கொள்ளப்படவில்லை. எவ்வாறாயினும் நிறுவனம் 87.66 மில்லியன் ரூபாவை சுய வருமானமாக ஈட்டியுள்ளது. இது சாதாரண நிலைமையை விடவும் வரவேற்கத்தக்க ஒரு நிலையாகக் காணப்படுகின்றது. நிறுவனத்தின் முதல் ஏழு மாதங்களுளில் ஈட்டப்பட்ட வரமானம் தொடர்பான விபரம் கீழே வரைபில் காட்டப்பட்டுள்ளது.



கணக்கியல் கொள்கைகள் பொது நிதிக் கூற்றுகளைத் தயாரித்தலின் அடிப்படைகள்

தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் கணக்கறிக்கை இலங்கை அரச பிரிவின் கணக்கியல் நியமங்களுக்கு ஏற்ற வகையில் தயாரிக்கப்படுகின்ற அதேவேளை, பொருத்தமான வகையில் அந்தக் கணக்கறிக்கைத் தொகுப்பில் குறிப்பிடப்பட்டிருக்கும் கணக்கியல் கொள்கைகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

ஒப்பீட்டுத் தகவல்கள்

நடைமுறை வருடத்தின் நிதிக்கூற்றுக்களைப் பரீட்சித்து விளங்கிக்கொள்ளும் வகையில் தேவையான முன்னைய வருட ஒப்பீட்டுத் தகவல்களும் நிதிக் கூற்றுக்களிலே காட்டப்படுகின்றன.

சிறந்த சமர்ப்பித்தலை வழங்குவதற்காக திருத்தியமைக்கப்பட்ட நிதிக் கூற்றில் காட்டப்படுகின்ற சமர்ப்பிக்கப்பட்ட அல்லது மறுவகைப்படுத்தப்பட்ட பொருட்களது நடைமுறை வருடத்திற்குரிய பெறுமதியானது காட்டப்படும்.

